(வலைப்பின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1999 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பகிரங்க சேவை சேமலாப நிதிய (திருத்தச்) சட்டம்

---

[1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1999 திசெம்பர் மாதம் 10 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற்கு பெற்றுக் கொள்ளலாம்.

விலை : ரூபா 5.25 தபாற் செலவு : ரூபா 3.50

## 1999 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, பகிரங்க சேவை சேமலாப நிதிய (திருத்தச் ) சட்டம்

[1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ.12/95.

## பகிரங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1,** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க,பகிரங்க சேவை சேமலாப நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் — சுருக்கப் பெயர்.

**2,** (இதனகத்துப் பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பகிரங்க சேவை சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— — 434 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்தல்.

"(4அ) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு :-

(அ) புகையிரதத் திணைக்களத்தில் புகையிரத நிலைய உப அதிபர் பதவியை ; அல்லது

(ஆ) இலங்கை பொலிசு ஒதுக்குப் படையில் பதவி யொன்றை,

வகிக்கின்ற ஆளொருவர் அரசாங்க சேவையில் ஓய்வூதியம் கொடுபடற்பாலதற்ற ஊழியரொருவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளுக்கு சம்பளத்திற்குப் பதிலாக செலுத்தப்படும் மாதாந்தப்படி மாதாந்த சம்பளமாகக் கருதப்படுதலும் வேண்டும்."

**3,** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆறு சதவீதத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எட்டு சதவீதத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில் "ஆறு சதவீத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எட்டு சதவீத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

H 22545

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு "ஆறு சதவீதத்துக்கு " என்னும் சொற்களுக்குப் பதிலாக "எட்டு சதவீதத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.*

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயனும் செல்லுபடியாதலும்*

*5. (1) இச்சட்டத்தின் 2 ஆம் ஆம் பிரிவில் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது–*

*(அ) அத்தகைய திருத்தம் புகையிரதத் திணைக்களத்தில் புகையிரத நிலைய உப அதிபர் பதவியை வகிக்கும் ஆளொருவருக்குத் தொடர்புறுத்துகின்ற அளவுக்கு எல்லா நோக்கங்களுக்காகவும் 1983, மே 1ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் ,1983 மே 1 ஆந் திகதிக்கும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது எவரேனும் அத்தகைய ஆளின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்டட கட்டாய உதவுதொகை செல்லுபடியான முறையில் கழிப்பனவு செய்யப்பட்டு செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்;*

*(ஆ) அத்தகைய திருத்தம் இலங்கைப் பொலிசு ஒதுக்குப் படையில் பதவியொன்றை வகிக்கும் ஆளொருவருக்குத் தொடர்புறுத்தும் அளவுக்கு 1991, சனவரி 1 ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் 1991, சனவரி 1 ஆந் திகதிக்கும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் போது அத்தகைய எவரேனும் ஆளின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்து நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட கட்டாய உதவுதொகை செல்லுபடியான முறையில் கழிப்பனவு செய்யப்பட்டுச் செலுத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*(2) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 1995, சனவரி 1 ஆந் திகதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் 1995, சனவரி 1 ஆந் திகதிக்கும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கும் இடையில் ஓய்வூதியம் கொடுபடற்பாலதற்ற*

ஊழியர்கள் சம்பளங்களிலிருந்து அவ்வாறு திருத்தப்பட்ட அத்தகைய பிரிவால் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் கழிப்பனவு செய்யப்பட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட தொகைகள் செல்லுபடியான முறையில் கழிப்பனவு செய்யப்பட்டு செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

6.இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை எதுவும் ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா(உள்நாடு) ரூபா.1,387; (வெளிநாடு) ரூபா.1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர் அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32,திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*